**சுருக்கம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் செயல்படும் அனைத்து அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 2024–2025 ஆம் நிதியாண்டு முதல் விரிவுபடுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை</u>

அரசாணை (நிலை)) எண். 17

நாள். 11.03.2024
திருவள்ளுவர் ஆண்டு 2055
சோபகிருது, மாசி 28

படிக்க:–

1 அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள். 27.07.2022.

2 அரசாணை (நிலை) எண்.1, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள். 13.01.2023.

3 அரசாணை (நிலை) எண்.33, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள். 07.06.2023.

4. அரசாணை (நிலை) எண்.60 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள். 11.09.2023.

5 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 09.01.2024 நாளிட்ட செய்திக் குறிப்பு.

6. மாண்புமிகு அமைச்சர் நிதி மற்றும் மனித வள மேலாண்மை அவர்கள் 2024–2025 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் வெளியிட்ட 19.2.2024 நாளிட்ட அறிவிப்பு.

7 சமூக நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.3652/சஉதி–2(1)/ 2023, நாள். 04.03.2024

------

ஆணை:–

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப் பகுதிகளில் செயல்படும் 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,14,095 தொடக்கப் பள்ளி (1 முதல் 5–ஆம் வகுப்பு வரை) மாணவ/மாணவியருக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை

உணவுத் திட்டத்தினை 2022-2023 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக செயல்படுத்திட ரூ.33.56 கோடி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் பள்ளிகளுடன் சேர்த்து 433 மாநகராட்சி / நகராட்சி அரசு நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் 56,098 தொடக்கப்பள்ளி மாணவ / மாணவியர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1-ல் விடுபட்ட ஒரு தொடக்கப் பள்ளியில் உள்ள 62 மாணவர்கள் என மொத்தம் 56,160 மாணவ மாணவியருக்கு ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நெறிமுறைகளின்படியும் செலவின விகிதத்திலும் விரிவுபடுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை முதற்கட்டம் மற்றும் இரண்டாம் கட்டமாக செயல்படுத்தியபொழுது பயனடைந்த மாணவ/மாணவியரின் சராசரி வருகை மற்றும் உணவு உட்கொள்பவர்களின் சராசரி சதவிகிதத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகள் (மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி) மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படும் 31,008 அரசுப் பள்ளிகளில் பயிலும் 15,75,900 தொடக்கப்பள்ளி (1 முதல் 5-ஆம் வகுப்பு வரை) மாணவ/மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 2023-2024-ஆம் ஆண்டில் விரிவுபடுத்தி அரசு ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை விரிவுபடுத்தும் பொருட்டு 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.404,41,31,980/- (ரூபாய் நானூற்று நான்கு கோடியே நாற்பத்தோரு இலட்சத்து முப்பத்தோராயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

4. மேலும் நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு (1) மாநில அளவிலான வழிகாட்டுதல் குழு (2) மாநில அளவிலான கண்காணிப்புக்குழு (3) மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு (4) பெருநகர சென்னை மாநகராட்சி கண்காணிப்புக்குழு (5) மாநகராட்சி அளவிலான கண்காணிப்புக்குழு (6) நகராட்சி அளவிலான கண்காணிப்புக்குழு (7) வட்டார அளவிலான கண்காணிப்புக்குழு (8) பள்ளி அளவிலான கண்காணிப்புக்குழு மற்றும் கூட்ட நடைமுறைகள் ஏற்படுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் 9.1.2024 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சிறுபான்மையினர் நலன் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் பின்வரும் செய்திக் குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது:-

**" கிராமப்புறங்களில் உள்ள அரசின் நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டி திட்டம் விரிவாக்கம் குறித்து வரும் நிதி நிலை அறிக்கையில் சாதகமாக பரிசீலிக்கப்படும்."**

6. மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில் சமூக நல ஆணையர் மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாட்டில் உள்ள ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு நிதி உதவி பெறும் 4,154 பள்ளிகளில், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 2,56,705 மாணவ மாணவியர் பயனடையும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 2024-2025ஆம் ஆண்டில் விரிவுபடுத்த பின்வரும் செலவினங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்:-

| 1 | தொடர் செலவினம் | உணவூட்டுச் செலவினம் |
|---|---|---|
| | பயனாளிகளின் எண்ணிக்கை | |
| | 2,56,705 (2,56,705xரூ. 12.71 நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு x 220 நாட்கள்) | ரூ.71,78,00,000 |
| 2 | தொடராச் செலவினம் | |
| அ | சமையல் உபகரணங்கள் மற்றும் சமையல் எரிவாயு இணைப்பு செலவினம் | ரூ.10,39,00,000 |
| ஆ | பதிவேடுகள் | ரூ.4,20,000 |
| இ | நிர்வாக மற்றும் மதிப்பீட்டுச் செலவினம் | ரூ.5,00,000 |
| | மொத்த தொடராச் செலவினம் | ரூ. 10,48,20,000 |
| | மொத்த செலவினம் (தொடர் செலவினம்+ தொடராச் செலவினம்) (ரூ.71,78,00,000 +ரூ.10,48,20,000) | ரூ.82,26,00,000 |

7. சமூக நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 2024-2025 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தும் பொருட்டு பின்வரும் ஆணைகளை வெளியிடுகிறது:-

1. முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தினை தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அரசு நிதி உதவி பெறும் 4154 பள்ளிகளில் 1 முதல் 5 ஆம்

வகுப்பு வரை பயிலும் 2,56,705 மாணவ மாணவியர் பயனடையும் வகையில் 2024–2025ஆம் நிதியாண்டு முதல் விரிவுபடுத்தி அரசு ஆணையிடுகிறது.

2. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தும் பொருட்டு 2024–2025–ஆம் நிதியாண்டில் கீழ்க்கண்ட செலவினங்களை மேற்கொள்ள ரூ.82,26,00,000/– (ரூபாய் எண்பத்தி இரண்டு கோடியே இருபத்தியாறு இலட்சம் மட்டும்) பின்வருமாறு ஒப்பளிப்பு செய்யப்படுகிறது:–

| | | |
|---|---|---|
| 1 | தொடர் செலவினம் | உணவூட்டுச் செலவினம் |
| | பயனாளிகளின் எண்ணிக்கை | |
| | 2,56,705 (2,56,705 x ரூ. 12.71 நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு x 220 நாட்கள்) (ரூ.71,77,98,521 rounded to ரூ 71,78,00,000) | ரூ.71,78,00,000 |
| 2 | தொடராச் செலவினம் | |
| அ | சமையல் உபகரணங்கள் மற்றும் சமையல் எரிவாயு இணைப்பு செலவினம் | ரூ.10,39,00,000 |
| ஆ | பதிவேடுகள் | ரூ.4,20,000 |
| இ | நிர்வாக மற்றும் மதிப்பீட்டுச் செலவினம் | ரூ.5,00,000 |
| | மொத்த தொடராச் செலவினம் | ரூ. 10,48,20,000 |
| | மொத்த செலவினம் (தொடர் செலவினம்+ தொடராச் செலவினம்) (ரூ.71,78,00,000 +ரூ.10,48,20,000) | ரூ.82,26,00,000 |

3. ஊரகப் பகுதிகளில் உள்ள 4154 அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை செயல்படுத்தும் பொறுப்பு அலுவலராக மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் நியமனம் செய்யப்படுகின்றார்.

4. இத்திட்டத்தை செயல்படுத்திட கிராம ஊராட்சிகளில் உள்ள அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம் மூலமாக அந்தந்தப் பள்ளியிலேயே காலை உணவு தயாரித்து வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.

5. அரசாணை (நிலை) எண்.33 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4–1) துறை, நாள். 07.06.2023 இணைப்பு–II மற்றும் இணைப்பு–III இல் குறிப்பிட்டுள்ளவாறு காலை உணவு வகைகள், மற்றும் பொதுவான

வழிமுறைகள் ஆகியவை இந்த அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் பொருந்தும்.

6. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட ஆணையின் இணைப்பு II–ல் குறிப்பிடப்பட்டுள்ள சிற்றுண்டி வகைகளிலிருந்து, குறிப்பிட்ட தினத்திற்கு, நிர்ணயிக்கப்பட்ட ஏதாவது ஒரு சிற்றுண்டியினை அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் வழங்கவும் ஒவ்வொரு வாரத்திலும் குறைந்தது இரண்டு நாட்களிலாவது, இயன்ற அளவு, அந்தந்த பகுதிகளில் விளையும்/ கிடைக்கும் சிறுதானியங்களின் அடிப்படையிலான சிற்றுண்டியினைத் தயார் செய்து வழங்கவும் அனுமதி வழங்கப்படுகிறது

7. அரசாணை (நிலை) எண்.60 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4–1) துறை, நாள். 11.09.2023 குறிப்பிட்டுள்ளவாறு கண்காணிப்புக்குழுக்கள் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளையும் கண்காணித்து நடைமுறைப்படுத்த ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

8. மேலே பத்தி–7(2)–ல் சமையல் உபகரணங்கள் / எரிவாயு இணைப்பிற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள தொடராச் செலவினத் தொகை ரூ.10.39 கோடியினை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்களுக்குப் பெற்று வழங்க சமூக நல ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

9. பதிவேடுகள் அச்சிட்டு வழங்குவதற்கான செலவினம், நிர்வாக/திட்ட மதிப்பீட்டிற்கான செலவினம் ரூ.9.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட செலவினங்களை மேற்கொள்ள சமூக நல ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

8. மேலே பத்தி–7(2)–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2236–சத்துணவு 02–சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102–மதிய உணவு– மாநிலச் செலவினங்கள் BG முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்துப் பள்ளி நாட்களிலும் அரசுத் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியருக்கு காலைச் சிற்றுண்டி வழங்குதல் 309 – உதவித்தொகை –03– குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை."

(IFHRMS த.தொ.கு: 2236 02 102 BG 30903)

9.இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.21/DS(SA)/2024, நாள். 11.03.2024–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்,
தலைமைச் செயலாளர். சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பணிகள் துறை, சென்னை–9
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை.9.
அரசு செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
சமூக நல ஆணையர், சென்னை–5.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், கீழ்ப்பாக்கம், சென்னை.10
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை.15.
மின் ஆளுமை இயக்குநர், சென்னை.2
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.
சிறப்பு அலுவலர், இல்லம் தேடிக் கல்வி மற்றும் திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், சென்னை.6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை.6.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை–I/II), சென்னை–18.
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.

நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.2) துறை, சென்னை.9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## இணைப்பு

அரசாணை( நிலை )எண்.17. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை நாள் 11.3.2024

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் செயல்படும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளின் விவரம்.

| வ.எண் | மாவட்டம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அரியலூர் | 38 | 3069 |
| 2 | செங்கல்பட்டு, | 61 | 3933 |
| 3 | கோயம்புத்தூர், | 23 | 929 |
| 4 | கடலூர், | 173 | 8870 |
| 5 | தர்மபுரி, | 8 | 981 |
| 6 | திண்டுக்கல் | 163 | 13377 |
| 7 | ஈரோடு | 38 | 3035 |
| 8 | கள்ளக்குறிச்சி | 74 | 7299 |
| 9 | காஞ்சிபுரம் | 36 | 2235 |
| 10 | கன்னியாகுமரி | 86 | 6781 |
| 11 | கரூர் | 24 | 1677 |
| 12 | கிருஷ்ணகிரி | 8 | 1013 |
| 13 | மதுரை | 94 | 10741 |
| 14 | மயிலாடுதுறை | 115 | 7342 |
| 15 | நாகப்பட்டினம் | 100 | 5382 |
| 16 | நாமக்கல் | 43 | 2433 |
| 17 | பெரம்பலூர் | 47 | 3879 |
| 18 | புதுக்கோட்டை | 61 | 5572 |
| 19 | ராமநாதபுரம், | 155 | 9579 |
| 20 | ராணிப்பேட்டை | 50 | 2141 |
| 21 | சேலம் | 24 | 3032 |
| 22 | சிவகங்கை | 114 | 5655 |
| 23 | தென்காசி | 368 | 25761 |
| 24 | தஞ்சாவூர் | 163 | 14061 |
| 25 | நீலகிரி | 31 | 541 |
| 26 | தேனி | 87 | 6847 |
| 27 | தூத்துக்குடி | 554 | 20927 |
| 28 | திருச்சிராப்பள்ளி | 158 | 12492 |

| | | | |
|---|---|---|---|
| 29 | திருநெல்வேலி | 438 | 19293 |
| 30 | திருப்பத்தூர் | 18 | 1701 |
| 31 | திருப்பூர் | 31 | 1836 |
| 32 | திருவள்ளூர் | 109 | 6121 |
| 33 | திருவண்ணாமலை | 109 | 6182 |
| 34 | திருவாரூர் | 64 | 5224 |
| 35 | வேலூர் | 74 | 3486 |
| 36 | விழுப்புரம் | 158 | 6626 |
| 37 | விருதுநகர் | 257 | 16652 |
| | மொத்தம் | 4154 | 256705 |

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.
11/3/24